வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 83 of 2019

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஸ்ரீதர் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சுத்தர்ராஜ் | வயது | : | |
| கிராமம் | : | பெரமியம் | | | |
| தாலுக்கா | : | தாராபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 10.06.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 10.06.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் கம்பெனியில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சௌந்திரராஜன் எனது சித்தாப்பா ஆவார். விபத்தில் இறந்துபோன கார்த்திகேயன் சித்தப்பா மகன் ஆவார். கடந்த 01.03.2019 ஆம் தேதி ஊரிலிருந்தபோது மாலை 5.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது எனது சித்தப்பா மகனுக்கு கள்ளிப்பாளையம் எம்.ஆர்.தோட்டம் அருகில் டாடா வேன் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நானும், உறவினர்களும் அந்த இடத்திற்கு வந்து பார்த்தபோது அங்கு சுந்தரவடிவேல் என்பவர் இருந்தார். அவர் எனது சித்தப்பா மகன் கார்த்திகேயன் பல்லடத்திலிருந்து தாராபுரம் நோக்கி TN 78 9114 என்ற பல்சர் வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது கள்ளிப்பாளையம் எம்.ஆர். தோட்டம் அருகில் எதிர் திசையில் வந்த டாடா வேன் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவரை ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் சொன்னார்.

2) நான் பல்லடம் அரசு மருத்துவமனை வந்து பார்த்தபோது தலையின் பின் பகுதியில் அடிபட்டு இருந்தது. மருத்துவர் பரிசோதித்து அவர் இறந்துவிட்டதாக சொன்னார். இது சம்மந்தமாக எனது சித்தப்பா போலீசில் புகார் கொடுத்தார். எனது சித்தப்பா மகன் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள். நான் உடனிருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

3) விபத்து தகவல் கிடைத்து இரவு 8.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று இருப்பேன் என்றால் சரிதான். நான் தனியாக தான் சென்றேன் என்றால், இறந்துபோன நபரின் பெற்றோருடன் வரவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.06.10 16:17:59 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 83 of 2019

வழக்கு சாட்சி - PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுந்தரவடிவேல் | தொழில் | : | வெல்டிங் வேலை |
| தந்தை பெயர் | : | மாணிக்கம் | வயது | : | |
| கிராமம் | : | கள்ளிபாளையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 10.06.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 10.06.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 01.03.2019 ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு மேல் பல்லடம்-தாராபுரம் ரோட்டில் எம்.ஆர். மணியன் தோட்டத்திற்கு எதிர் புறத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். அப்போது TN 48 H 8172 என்ற டாடா வேன் தாராபுரத்திலிருந்து பல்லடம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது அதன் எதிர் புறத்தில் பல்லடத்திலிருந்து தாராபுரம் நோக்கி பல்சர் இருசக்கர வாகனம் வந்து கொண்டிருந்தபோது டாடா வேன் அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் வந்து வலது பக்கம் ஏறி வெள்ளை கோட்டை தாண்டி வந்து பல்சர் இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. அதில் அவர் கீழே விழுந்துவிட்டார். நான் போய் பார்த்தபோது தலையின் பின்பகுதியில் பலத்த அடி. கையில் சிராய்ப்பு காயம் இருந்தது. உடனே ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்தவருடைய செல்போன் கீழே கிடந்தது. அதை எடுத்து அவரது அப்பாவிற்கு போன் செய்து தகவல் சொன்னேன். அவரும், நான்கு, ஐந்து பேர் வந்துவிட்டார்கள். அவர்கள் வந்து என்னிடம் கேட்டார்கள். நான் நடந்த விபரத்தை சொன்னேன். பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாக சொன்னேன். டாடா வேனை ஓட்டி வந்த நபரை பார்த்தேன். பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். (எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355

BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது). டாடா வேனை ஓட்டி வந்தவர் பெயர் விஜய் என்று சொன்னார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :

2) விபத்து நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலோ, அதற்கு பின்னிட்டு ஒரு மணி நேரத்திலேயோ அடிபட்ட நபரின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்போன் தகவல் சொன்னதாக சொல்லியுள்ளதில் என்ன போன், அவரது அப்பா பெயரை எவ்வாறு பதிவு செய்து வைத்திருந்தார் போன்ற விபரங்கள் தெரியாது என்றால் சரிதான். அவர் போனுக்கு என்ன Password போட்டு வைத்திருந்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்தற்கு பின்னிட்டு சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்லியுள்ளதில் 5, 6 நபர்கள் வந்து இருப்பார்கள் என்றால் முதலில் மூன்று நபர்கள் வந்தார்கள். முதல் விசாரணையில் 4, 5 நபர்கள் வந்ததாக சொல்லியுள்ளத்தில் எத்தனை வாகனத்தில் வந்தார்கள் என்றால் ஒரே காரில் வந்தார்கள். அவர்கள் வந்தபோது எத்தனை மணி இருக்கும் என்றால் 7.30 மணி இருக்கும்.

3) ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி எப்போது வந்தது என்றால் தோராயமாக 5.30, 5.45 மணி இருக்கும். ஆம்புலன்சின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. 108 ஆம்புலன்ஸ் வந்ததா என்றால் இல்லை. தனியார் ஆம்புலன்ஸ். விபத்து நடந்து ஒரு மணி நேரத்தில் போலீசார் வந்து இருப்பார்கள் என்றால் நான் இருக்கும் வரை போலீசார் வரவில்லை. வீட்டிலிருந்து சத்தம் கேட்டு ஒரு 5 நிமிட இடைவெளியில் சென்று இருப்பேன் என்றால் சரிதான். நான் சென்று பார்க்கும்போது கூட்டமாக இருந்தது என்றாலும், கூட்டத்தை விலக்கிவிட்டு பார்க்கும்போது விபத்து நடந்தது தெரியும் என்றாலும் கூட்டமாக இருந்தது. நான் சென்று 10 நிமிடம் கழித்து கங்கை அமரன் வந்து இருப்பார் என்றால் சரிதான். காமநாயக்கன்பாளையம் போலீசார் ஓரளவிற்கு எனக்கு அறிமுகமானவர்கள் என்றால் அனைவரையும் தெரியாது. ரோந்து வரும் நபர்களை தெரியும். போலீசார் விபத்து சம்மந்தமாக சாட்சியாக இருக்க சொல்லி கேட்டார்கள் அதன் பேரில் எனது பெயர், கங்கை அமரன் பெயர் போன்ற விபரங்களை வாங்கி சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவதினத்தன்று மழை பெய்தது என்றால் ஞாபகம் இல்லை. சம்பவத்தை நேரில் பார்க்காததால் சம்பவம் எப்படி நடநத்து என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். வாகனத்தின்

பதிவுவெண்ணை பின்னிட்டு நான் தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சாட்சிகள் போலீசார் வாக்குமூலத்தை படித்து பார்த்து இரண்டு வாகனத்தின் பதிவு எண்கள் மற்றும் மற்ற விபரங்களை படித்து பார்த்து சொன்னேனா என்றால் ஆமாம். வழக்கு விபத்திற்கு இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் தான் காரணம் என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA
Date: 2025.06.10 16:18:06 +05'30'

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 83 of 2019

வழக்கு சாட்சி - PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சௌந்தரராஜன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | நாச்சிமுத்து | வயது | : | |
| கிராமம் | : | பெரமியம் | | | |
| தாலுக்கா | : | தாராபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 10.06.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 10.06.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு செய்து வருகிறேன். எனது மகன் கார்த்திகேயன் கள்ளிபாளையத்தில் தரகட்டுப்பாட்டு ஆய்வாளராக வேலை பார்த்து வந்தார். கடந்த 28.02.2019 ஆம் தேதி வீட்டிற்கு வந்து விட்டு வேலைக்கு செல்வதாக சொல்லிவிட்டு சென்றவர் 01.03.2019 ஆம் தேதி காலை நான் வீட்டிலிருந்தபோது எனது மகன் செல்போனிலிருந்து ஒரு நபர் பேசி கள்ளிப்பாளையம் மணி தோட்டத்திற்கு அருகில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான், எனது மனைவி, எனது மகள் ஆகியோர்கள் கள்ளிப்பாளையம் வந்து சம்பவம் நடந்த இடத்தை பார்த்தபோது அங்கிருந்த சுந்தரவடிவேல் என்பவர் என்னிடம் TN 78 9114 என்ற எண்ணுள்ள பல்சர் இருசக்கர வாகனத்தில் பல்லடத்திலிருந்து தாராபுரம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது டாடா வேன் TN 48 H 8172 என்ற வேன் கள்ளிப்பாளையம், எம்.ஆர். மணி தோட்டம் முன்பாக என் மகன் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாக சொன்னார்.

2) டாடா வேனை ஓட்டிவந்தவர் திண்டுக்கல் மாவட்டம், சாமியார்புதூரை சேர்ந்த விஜய் என்று சொன்னார்கள். நான் உடனே பல்லடம் அரசு மருத்துவமனை சென்று என் மகனை பார்த்தபோது தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்து இருந்தார். இது சம்மந்தமாக 01.03.2019 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு காமநாயக்கன்பாளையம் காவல் நிலையம் சென்று

புகார் கொடுத்தேன். புகாரினை நான் சொல்ல சொல்ல என் மருமகன் சங்கர் எழுதினார். அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் அ.சா.ஆ.1** ஆகும். மறுநாள் 02.03.2019 ஆம் தேதி போலீசார் எனது மகன் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள். நான் உடனிருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

3) விபத்து தகவல் கிடைத்து எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனை வந்தேன் என்றால் 7, 8 மணி இருக்கும். தாராபுரத்திலிருந்து எனது ஊருக்கு எவ்வளவு தூரம் என்றால் 16 கிலோ மீட்டர். யார் யார் வந்தோம் என்றால் நான், எனது மகள் நித்தியா, எனது மனைவி மூன்று பேர் வந்தோம். அதற்கு பின்னிட்டு தான் உறவினர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். எதில் வந்தோம் என்றால் காரில் வந்தோம். போலீசார் அப்போதே இரவு விசாரித்தார்கள் என்றால் மறுநாள் விசாரித்தார்கள். புகார் எப்போது கொடுத்தேன் என்றால் இரவு 10.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தேன்.

4) எனது மகன் என்ன செல்போன் வைத்திருந்தார் என்றால் விவோ போன் ஆகும். அதில் எனது பெயரை என்னவாறு பதிவு செய்து வைத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தகவல் 5.00 மணிக்கு சொல்லியிருப்பார்களா என்றால் 5.15 மணிக்கு சொன்னார்கள். யார் தகவல் சொன்னது என்று எனக்கு தெரியாது என்றால் சம்பவ இடத்திற்கு வந்தபோது சுந்தரவடிவேல் என்பது தெரிந்து கொண்டேன். எத்தனை மணிக்கு சொன்னார் என்றால் இரவு 7.00 மணிக்கு சொன்னார். அப்போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 5, 6 நபர்கள் இருந்தார்கள். யார் யார் இருந்தார்கள், அவர்களின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். நஷ்ட ஈடு பெற்றுவிட்டோமா என்றால் இல்லை.

5) நாங்கள் அரசு மருத்துவமனைக்கு வந்தபோது நஷ்ட ஈடு கேட்டு வழக்கு போட வழக்கறிஞர்கள் வந்தார்கள் என்றால் வரவில்லை. எப்போது வந்தார்கள் என்றால் தாராபுரத்தில் வழக்கறிஞர் வைத்துக்கொண்டேன். உறவினர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது சம்மந்தமாக பார்த்துக்கொண்டார்கள் என்றால் ஆமாம். மோதிய வாகனத்தின் வண்டியின் பதிவு எண், என்ன வாகனம், ஓட்டி வந்தவர் பெயர் போன்ற விபரங்களை போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் ஆமாம். புகாரியை யார் எழுதியது என்றால்

மருமகன் எழுதினார். எழுதியதற்காக எனது மருமகன் சாட்சி கையொப்பம் செய்தாரா என்றால் போட்டு இருப்பார். அவர் படித்து காண்பித்தார். நான் கையொப்பம் செய்தேன். எனது மகன் வேலை செய்த கம்பெனியின் நிர்வாகத்தினர் இரவு வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு விபத்திற்கு எனது மகன் தான் காரணம் என்றாலும், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து எனது மகன் விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. புகார் காவல் துறையினரால் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும், அதில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றாலும் சரியல்ல. எனது மருமகன் தான் எழுதினார். நஷ்ட ஈடு கிடைக்கவேண்டும் என்பதற்கா கொடுக்கப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.06.10 16:18:11 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.